Register Number | | | | | | |

**Part III**

# அரசியல் அறிவியல் / POLITICAL SCIENCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ii) அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள். $20 \times 1 = 20$

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதவும் :

1. "அரசு என்பது சமூகம் என்ற தோரணவாயிலின் முக்கிய கல்" என்று கூறியவர்

அ) லாஸ்கி ஆ) மாக்ஐவர்

இ) பினெட் ஈ) ரூஸோ.

2. பிரெஞ்சு புரட்சியாளர்களால் 'மனித உரிமைகள் பிரகடனம்' வெளியிடப்பட்ட ஆண்டு

அ) 1789 ஆ) 1779

இ) 1788 ஈ) 1790.

3. சமுதாய ஒப்பந்தக் கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர்

அ) ஜென்னெக்ஸ் ஆ) மார்க்ஸ்

இ) ரூஸோ ஈ) சர் ஹென்றி மெயின்.

[ Turn over

4. பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டை ஆட்சி செய்தவர்

அ) முதலாம் சார்லஸ் ஆ) முதலாம் ஜேம்ஸ்

இ) முதலாம் எலிசபெத் ஈ) விக்டோரியா.

5. நிலைத்த தன்மையுடைய ஆளுமையை உருவாக்கத் தேவைப்படுவது

அ) நியத்தன்மை ஆ) அதிகாரம்

இ) குடும்பம் ஈ) அரசு.

6. புதிய அரசியல் சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவிய சமூகப் பொறியாளர்

அ) லாக் ஆ) ரூஸோ

இ) ஹெரால்டு லாஸ்கி ஈ) ஹீனஸ் ஜுலா.

7. இந்தியக் கலாச்சாரம் மிகவும் பலம் வாய்ந்தது எனக் கூறியவர்

அ) P. ஹன்ட்டிங்டன் ஆ) அமர்த்தியா சென்

இ) காரல் மார்க்ஸ் ஈ) பீட்டர் ட்ருக்கர்.

8. 'மேலாண்மை இயலின் குரு' என்று அழைக்கப்படுபவர்

அ) ரூஸோ ஆ) ஹன்ட்டிங்டன்

இ) பீட்டர் ட்ருக்கர் ஈ) கார்ல் மார்க்ஸ்.

9. சுவிட்சர்லாந்து நாட்டில் செயற்குழு உறுப்பினர்களின் பதவி காலம்

அ) ஓராண்டு ஆ) இரண்டு ஆண்டுகள்

இ) மூன்று ஆண்டுகள் ஈ) நான்கு ஆண்டுகள்.

10. தலைவர் முறை அரசாங்கம் பின்பற்றப்படும் நாடு

அ) அமெரிக்கா ஆ) இங்கிலாந்து

இ) இந்தியா ஈ) ஜப்பான்.

11. 'சட்டங்களின் உயிர்' என்ற நூலை எழுதியவர்

அ) பென்தாம் ஆ) மாண்டெஸ்கியூ

இ) லாஸ்கி ஈ) கார்னர்.

12. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த பென்தாம் என்பவர் ஒரு

அ) நீதிபதி ஆ) அரசியல்வாதி

இ) ஆசிரியர் ஈ) சமூக சீர்திருத்த அறிஞர்.

13. 42 வது சட்டதிருத்தம் நடைமுறைக்கு வந்த ஆண்டு

அ) 1947 ஆ) 1976

இ) 1967 ஈ) 1950.

14. மாநிலங்கள் அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை

அ) 220 ஆ) 200

இ) 250 ஈ) 230.

15. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சட்டசபையின் பதவிக்காலம்

அ) மூன்று ஆண்டுகள் ஆ) நான்கு ஆண்டுகள்

இ) ஐந்து ஆண்டுகள் ஈ) ஆறு ஆண்டுகள்.

16. சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை, மதுரையில் துவங்கப்பட்ட ஆண்டு

அ) 1990 ஆ) 1994

இ) 2000 ஈ) 2004.

17. மாநகராட்சி நிர்வாகத்தின் அச்சாணியாக திகழ்பவர்

அ) ஆணையர் ஆ) கவுன்சிலர்

இ) மேயர் ஈ) துணை மேயர்.

18. கீழ்க்கண்டவற்றில் எது நகரியம் ஆகும் ?

அ) பெங்களூர் ஆ) கொல்கத்தா

இ) நெய்வேலி ஈ) கோயம்புத்தூர்.

19. இந்தியாவில் மிகக் குறைந்த மக்கள்தொகை உள்ள மாநிலம்

அ) கேரளா ஆ) ஆந்திர பிரதேசம்

இ) பீகார் ஈ) அருணாச்சல பிரதேசம்.

20. 18 வயதடைந்த அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்கிய அரசியலமைப்புத் திருத்தம்

அ) 61 வது திருத்தம் ஆ) 72 வது திருத்தம்

இ) 73 வது திருத்தம் ஈ) 74 வது திருத்தம்.

II. கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க : 10 × 1 = 10

21. இந்தியாவில் நிலவிய நில உடமை அமைப்பு ........................ முறை எனப்பட்டது.

22. சமுதாய ஒப்பந்த கோட்பாட்டிற்கு அறிவியல்பூர்வமான விளக்கம் தந்தவர் ........................ .

23. ஆளுமையின் வகைப்பாட்டினைக் கூறியவர் ........................ .

24. இறைமைக்கு இரண்டுவிதமான எல்லைத் தடைகள் உண்டு என்றவர் ..................... .

25. இலத்தீன் மொழியில் ........................ என்ற சொல் வீடு அல்லது மன்றம் என்று பொருள்படும்.

26. சுவிட்சர்லாந்தில் உள்ள மாகாணங்கள் ........................ என அழைக்கப்பட்டன.

27. இந்திய பிரதம அமைச்சர் ........................ தலைவர் ஆவார்.

28. இராணுவக்கூட வாரியங்கள் அமைக்கப்பட்ட ஆண்டு ........................ .

29. மாநகர ஆட்சியின் அரசியல் ரீதியான தலைவர் ........................ ஆவார்.

30. பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலம் ........................ ஆகும்.

III. கீழ்வருவன *சரியா* அல்லது *தவறா* என எழுதுக : 10 × 1 = 10

31. தூத்தோனிய ஆதிவாசிகள் பழங்குடியினர் நிலையிலேயே வாழ்ந்தனர்.

32. பரிணாமக் கோட்பாடு அறிவியல் சார்ந்த கோட்பாடு.

33. யூலாவின் கருத்துப்படி பெருமளவு பகுப்பாய்வு என்பது தனி மனிதனை அடிப்படையாகக் கொண்டு அமையும்.

34. செய்தி தொடர்புகளின் புரட்சி, இன்று அரசுகளை வெறும் சிறிய நகர அரசுகளாக மாற்றின.

35. கூட்டாட்சி அரசாங்க முறையில் மைய அரசில் அதிகாரங்கள் குவிக்கப் பட்டிருக்கின்றன.

36. நாடாளுமன்றம் கூடாத காலங்களில் அவசர சட்டம் பிறப்பிக்க குடியரசு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

37. 1956 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு திருத்த சட்டப்படி ஒரு ஆளுநர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் பதவி வகிக்கலாம்.

38. நகரியகங்கள் முழுமையாக திட்டமிடப்பட்டவை அல்ல.

39. ஒரு நபர் மற்றவர்களுக்கு பின்தங்குவது முழுமையான வறுமை ஆகும்.

40. இந்தியப் பொருளாதாரம் ஒரு கலப்பு பொருளாதாரம் ஆகும்.

IV. கீழ்வருவனவற்றைப் பொருத்துக: $10 \times 1 = 10$

| | | | |
|---|---|---|---|
| 41. | மகல்வாரி முறை | a) | 1938 |
| 42. | சமூக ஒப்பந்தக் கோட்பாடு | b) | சுவிட்சர்லாந்து |
| 43. | குழு முறை அரசாங்கம் | c) | கியூபா |
| 44. | சர். ஹென்றி மெயின் | d) | 30 வயது |
| 45. | காஸ்ட்ரோ | e) | ஜம்மு மற்றும் காஷ்மீர் |
| 46. | மாநிலங்கள் அவை உறுப்பினராக வயது | f) | 1977 |
| 47. | அரசியல் சட்ட விதி 370 | g) | வடமேற்கு இந்தியா |
| 48. | அசோக் மேத்தா குழு | h) | 1949 |
| 49. | தேசிய திட்டக்குழு | i) | தாமஸ் ஹாப்ஸ் |
| 50. | அய்யங்கார் குழு | j) | ஆங்கில அறிஞர். |

## பகுதி - ஆ

*குறிப்பு :* i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. 10 × 3 = 30

51. சோசலிச அரசினை வரையறு.

52. வலிமைக் கொள்கை என்றால் என்ன ?

53. புதிய அரசியல் அறிவியல் என்றால் என்ன ?

54. உயர் வகுப்புக் கோட்பாடு என்றால் என்ன ?

55. திறந்த பொருளாதாரம் - விளக்குக.

56. ஒற்றையாட்சி அரசாங்கம் - பொருள் தருக.

57. அறிவு சார்ந்த சமுதாயம் என்றால் என்ன ?

58. இராணுவக்கூட வாரியம் - குறிப்பு வரைக.

59. நீதி மறு ஆய்வு என்றால் என்ன ?

60. அதிகாரப் பிரிவினைக் கொள்கை என்றால் என்ன ?

61. மத்திய அமைச்சரவை பற்றி குறிப்பு வரைக.

62. உயர்நீதிமன்ற நீதிபதியாவதற்குரிய தகுதிகள் யாவை ?

63. பல்வந்த்ராய் மேத்தா அறிக்கை - குறிப்பு வரைக.

64. இந்திய புதிய விவசாயக் கொள்கையை விளக்கு.

65. தேசிய வருமானம் என்றால் என்ன ?

## பகுதி - இ

*குறிப்பு :* i) எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்க.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி. 6 × 10 = 60

66. இன அரசின் ( Nation State ) வளர்ச்சியை விளக்குக.

67. சர். ஹென்றி மெயினின் கொள்கையை விவரி.

68. உலகமயமாக்கப்பட்டதில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை ?

69. ஓரவை மற்றும் ஈரவை முறையிலுள்ள வேறுபாடுகள் யாவை ?

70. கூட்டாட்சி அரசாங்கத்தின் கூறுகளை கூறி விவரி.

71. காபினெட்டின் அம்சங்கள் யாவை ?

72. நீதிப் பேராணைகளின் வகைகளை விவரி.

73. மாநகராட்சியின் பணிகள் யாவை ?

74. இந்தியாவின் எதிர்கால திட்டங்கள் யாவை ?

## பகுதி - ஈ

*குறிப்பு :* i) எல்லா வினாக்களுக்கும் விடையளி.

ii) எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) எல்லா வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடையளி. $3 \times 20 = 60$

75. சமதர்ம அரசின் நிறைகுறைகளை விவரி.

*அல்லது*

அரசின் பரிணாம வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்த காரணிகள் யாவை ?

76. பாராளுமன்ற அரசு முறை குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

*அல்லது*

நகராட்சியின் பணிகள் யாவை ?

77. இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் யாவை ?

*அல்லது*

ஆளுநரின் அதிகாரங்களும் பணிகளும் யாவை ?